
இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

● (iv) தொடக்கம் (vii) வரையுள்ள பகுதிகள் மேலே (iii) இல் தரப்பட்ட லூயி குற்று-கோட்டுக் கட்டமைப்பை அடிப்படையாய்க் கொண்டவை. அணுக்களைப் பெயரிடுதல் பகுதி (iii) இல் உள்ளவாறாகும்.

(iv) கீழே தரப்பட்டுள்ள இரு அணுக்களுக்குமிடையே σ பிணைப்புகளை உண்டாக்குவதற்குப் பங்குபற்றும் அணு/கலப்பின் ஓபிற்றல்களை இனங்காண்க.

I.	$Cl—N^1$	Cl	N^1	.....
II.	$N^1—O$	N^1	O	.....
III.	$N^1—N^2$	N^1	N^2	.....
IV.	$N^2—O^3$	N^2	O^3	.....
V.	$O^3—C^4$	O^3	C^4	.....
VI.	$C^4—N$	C^4	N	.....

(v) பின்வரும் இரு அணுக்களுக்கிடையேயும் π பிணைப்புகளை உண்டாக்குவதற்குப் பங்குபற்றும் அணு ஓபிற்றல்களை இனங்காண்க.

I.	$N^1—N^2$	N^1	N^2	.....
II.	$C^4—N$	C^4	N	.....
		C^4	N	.....

(vi) N^1, N^2, O^3, C^4 அணுக்களைச் சுற்றியுள்ள அண்ணளவான பிணைப்புக் கோணங்களைக் குறிப்பிடுக.

N^1....., N^2 ....., O^3 ....., C^4.....

(vii) N^1, N^2, O^3, C^4 என்னும் அணுக்களை மின்னெதிர்த்தன்மை **அதிகரிக்கும்** வரிசையில் ஒழுங்குபடுத்துக.

..... < ..... < ..... < ..... **(56 புள்ளிகள்)**

(*c*) பின்வரும் தகவல்களைக் கருதுக.

I. **A, B** ஆகிய அணுக்கள் சேர்ந்து ஒரு σ பிணைப்பைக் கொண்ட ஒரு விசமஈரணு மூலக்கூறு **AB** ஐ உண்டாக்குகின்றன. இது **A – B** எனக் குறிப்பிடப்படும்.

II. **A** இன் மின்னெதிர்த்தன்மை **B** இன் மின்னெதிர்த்தன்மையிலும் குறைவானது ($X_A < X_B$). X = அணுவின் மின்னெதிர்த்தன்மை.

III. பின்வரும் சமன்பாட்டின் மூலம் **AB** மூலக்கூறின் **A, B** ஆகிய அணுக்களுக்கிடையே உள்ள கருவிடைத் தூரம் (d_{A-B}) தரப்படுகின்றது.

$d_{A-B} = r_A + r_B - c(X_B - X_A)$

r = அணு ஆரை; c = 9 pm

குறிப்பு: d, r ஆகியன பிக்கோமீற்றரில் (pm) அளக்கப்படுகின்றன (1 pm = 10^{-12} m).

மேற்குறித்த தகவல்களை அடிப்படையாய்க் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) **A** இற்கும் **B** இற்குமிடையே உள்ள σ பிணைப்பின் வகையை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் பெயர் யாது?

.....

(ii) மூலக்கூறு **AB** இல் பகுதி (fractional) ஏற்றங்கள் ($\delta+$ உம் $\delta-$ உம்) எவ்வாறு அமைந்துள்ளன எனக் காட்டுக.

.....

(iii) மூலக்கூறு **AB** இன் இருமுனைவுத் திருப்புதிறன் (μ) ஐக் கணிப்பதற்கான சமன்பாட்டை எழுதி அதன் திசையைக் காட்டுக.

[பக். 4 ஐப் பார்க்க

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(iv) பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி HF மூலக்கூறில் H–F பிணைப்பின் அயன் இயல்பின் சதவீத்தைக் கணிக்க.

H_2 இன் கருவிடைத் தூரம் $(d_{H-H}) = 74\,pm$ F இன் மின்னெதிர்த்தன்மை = 4.0

F_2 இன் கருவிடைத் தூரம் $(d_{F-F}) = 144\,pm$ HF இன் இருமுனைத் திருப்புதிறன் = 6.0×10^{-30} C m

H இன் மின்னெதிர்த்தன்மை = 2.1 ஓர் இலத்திரனின் ஏற்றம் = 1.6×10^{-19} C

100

(20 புள்ளிகள்)

2. (*a*) **A, B, C, D** ஆகியன *p*-தொகுப்பு மூலகங்களின் குளோரைட்டுகளாகும். இம்மூலகங்களின் அணுவெண்கள் 20 இலும் குறைந்தவையாகும். **A** ஆனது ஒரு வரையறுத்த அளவு நீருடன் தாக்கம் புரியும்போதும் **B, C, D** ஆகியன மிகையான நீருடன் தாக்கம் புரியும்போதும் உண்டாகும் விளைபொருள்கள் ($P_1 - P_9$) இன் ஒரு விவரணம் கீழே தரப்பட்டுள்ளது.

சேர்வை	விளைபொருள்களின் விவரணம்	
A	P_1	ஒரு பங்கீட்டுவலு வலையமைப்புக் கட்டமைப்பு உள்ள ஒரு சேர்வை
	P_2	ஒரு வலிமையான ஒருமூல அமிலம்
B	P_3	செம்பாசிச்சாயத்தை நீலமாக மாற்றும் ஒரு வாயு
	P_4	வெளிற்றும் இயல்புகள் உள்ள ஒரு சேர்வை
C	P_5	ஒரு மும்மூல அமிலம்
	P_6	ஒரு வலிமையான ஒருமூல அமிலம்
D	P_7	அமில $KMnO_4$ கரைசலை நிறமற்றதாக மாற்றும் ஒரு வாயு
	P_8	ஒரு கூழ்த் திண்மம்
	P_9	ஒரு வலிமையான ஒருமூல அமிலம்

(i) **A, B, C, D** ஆகியவற்றை இனங்காண்க (இரசாயனச் சூத்திரங்களைத் தருக).

A: ..... **B**: ..... **C**: ..... **D**: .....

(ii) P_1 தொடக்கம் P_9 வரையுள்ள விளைபொருள்களைத் தருவதற்கு நீருடன் நடைபெறும் **A, B, C, D** ஆகியவற்றின் தாக்கங்களுக்குச் சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளைத் தருக.

.....

.....

.....

.....

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(iii) பின்வரும் தாக்கங்களுக்குச் சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.

I. $\mathbf{P_1}$ உடன் NaOH(aq)

.....

II. $\mathbf{P_3}$ உடன் Mg

.....

III. $\mathbf{P_7}$ உடன் அமில $K_2Cr_2O_7$

.....

(50 புள்ளிகள்)

(*b*) $Al_2(SO_4)_3$, H_2SO_4, $Na_2S_2O_3$, $BaCl_2$, $Pb(Ac)_2$, KOH ஆகியவற்றின் நீர்க் கரைசல்களைக் கொண்டுள்ள **P, Q, R, S, T, U (இதே ஒழுங்கிலன்றி)** எனப் பெயரிட்ட போத்தல்கள் ஒரு மாணவனிடம் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை இனங்காண்பதற்கு ஒரு தடவைக்கு இரு கரைசல்கள் வீதம் கலக்கும்போது கிடைக்கும் சில பயன்மிக்க அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(Ac - அசற்றேற்று அயன்)

	கலக்கப்பட்ட கரைசல்கள்	**அவதானிப்புகள்**
I	**T + R**	ஒரு தெளிவான நிறமற்ற கரைசல்
II	**P + R**	ஒரு வெள்ளை வீழ்படிவு
III	**T + S**	செலற்றின் போன்ற ஒரு வெள்ளை வீழ்படிவு
IV	**U + R**	ஒரு வெள்ளை வீழ்படிவு
V	**P + Q**	ஒரு வெள்ளை வீழ்படிவு வெப்பமாக்கப்படும்போது கறுப்பாக மாறுகின்றது
VI	**P + U**	ஒரு வெள்ளை வீழ்படிவு வெப்பமாக்கப்படும்போது கரைகின்றது

(i) **P** தொடக்கம் **U** வரைக்கும் இனங்காண்க

P: ..... **Q**: ..... **R**: .....

S: ..... **T**: ..... **U**: .....

(ii) மேலே **I** தொடக்கம் **VI** வரையுள்ள தாக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளைத் தருக.

I: .....

II: .....

III: .....

IV: .....

V: வெள்ளை வீழ்படிவு உண்டாதல்: .....

வெப்பமாக்கும்போது கறுப்பாக மாறுதல்: .....

VI: .....

(**குறிப்பு**: வீழ்படிவுகளை ↓ எனக் காட்டுக.) **(50** புள்ளிகள்)

100

3. (*a*) நீரில் அரிதாகக் கரையும் ஓர் உப்பு $AB_2(s)$ இன் ஒரு நிரம்பிய நீர்க் கரைசல் 25 °C இல் காய்ச்சி வடித்த நீரின் 1.0 dm^{-3} இல் $AB_2(s)$ இன் ஒரு மிகையான அளவைக் கலக்குவதன் மூலம் தயாரிக்கப்பட்டது. இந்நிரம்பிய நீர்க் கரைசலில் இருக்கும் $A^{2+}(aq)$ அயன்களின் அளவு 2.0×10^{-3} mol எனக் காணப்பட்டது.

(i) 25 °C இல் மேற்குறித்த தொகுதியில் $AB_2(s)$ இன் கரைவுடன் (dissolution) தொடர்புபட்ட சமநிலையை எழுதுக.

.....

(ii) 25 °C இல் மேலே (i) இல் எழுதப்பட்ட சமநிலைக்கான சமநிலை மாறிலிக்குரிய கோவையை எழுதுக.

.....

.....

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(iii) 25 °C இல் மேலே (ii) இற் குறிப்பிட்ட சமநிலை மாறிலியின் பெறுமானத்தைக் கணிக்க.

.....

.....

.....

.....

.....

.....

(iv) AB_2 இன் வேறொரு நிரம்பிய நீர்க் கரைசல் 25 °C இல் காய்ச்சி வடித்த நீரின் 2.0 dm^3 இல் $AB_2(s)$ இன் ஒரு மிகையான அளவைக் கலக்குவதன் மூலம் தயாரிக்கப்பட்டது. இத்தொகுதிக்குரிய சமநிலை மாறிலியின் பெறுமானத்தைக் காரணங்கள் தந்து எதிர்வுகூறுக.

.....

.....

(v) 25 °C இல் இருக்கும் AB_2 இன் ஒரு நிரம்பிய நீர்க் கரைசலுடன் வலிமையான மின்பகுபொருள் NaB(s) இன் ஒரு சிறிதளவு சேர்க்கப்பட்டது. $A^{2+}(aq)$ இன் செறிவு அதிகரிக்கின்றதா, குறைகின்றதா என்பதைக் காரணங்கள் தந்து எதிர்வுகூறுக.

.....

.....

.....

(60 புள்ளிகள்)

(*b*) ஒரு நீர்க் கரைசலில் புறொப்பனொயிக் அமிலம் (C_2H_5COOH) பின்வருமாறு அயனாகின்றது.

$C_2H_5COOH(aq) + H_2O(l) \rightleftharpoons C_2H_5COO^-(aq) + H_3O^+(aq)$

25 °C இல் K_a (புறொப்பனொயிக் அமிலம்) = 1.0×10^{-5}

(i) 25 °C இல் மேற்குறித்த தாக்கத்திற்கான சமநிலை மாறிலிக்குரிய கோவையை எழுதுக.

.....

.....

(ii) 25 °C இல் C_2H_5COOH இன் 0.74 cm^3 ஐக் காய்ச்சி வடித்த நீரில் கரைப்பதன் மூலம் $C_2H_5COOH(aq)$ இன் ஒரு நீர்க் கரைசலின் 100.0 cm^3 தயாரிக்கப்பட்டது. 25 °C இல் இக்கரைசலின் pH பெறுமானத்தைக் கணிக்க.

(C = 12; O = 16; H = 1; C_2H_5COOH இன் அடர்த்தி 1.0 g cm^{-3} எனக் கருதுக.)

100

(40 புள்ளிகள்)

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

4. (*a*) **A, B, C, D** ஆகியன மூலக்கூற்றுச் சூத்திரம் C_6H_{10} ஐக் கொண்ட கட்டமைப்புச் சமபகுதியங்களாகும். இவற்றில் எதுவும் ஒளியியற் சமபகுதிச்சேர்வைக் காட்டுவதில்லை. **A, B, C, D** ஆகிய இந்நான்கு சமபகுதியங்களும் $HgSO_4$ / ஐதான H_2SO_4 உடன் பரிகரிக்கப்படும்போது தரும் விளைபொருள்கள் 2,4- இருநைத்திரோபீனைல்ஹைதரசீன் (2,4 -DNP) உடன் தாக்கம் புரிந்து நிற வீழ்படிவுகளைத் தருகின்றன. அமோனியாசேர் $AgNO_3$ உடன் **A** மாத்திரம் ஒரு வீழ்படிவைத் தருகின்றது. **A** இற்கு ஒரு தானச் (position) சமபகுதியம் மாத்திரம் இருக்கும். அது **B** ஆகும். **B** ஆனது **C** இன் ஒரு சங்கிலிச் சமபகுதியமாகும். **C** ஆனது $HgSO_4$ / ஐதான H_2SO_4 உடன் தாக்கம் புரிந்து **E, F** என்னும் இரு விளைபொருள்களைத் தருகின்றது. **D** ஆனது $HgSO_4$ / ஐதான H_2SO_4 உடன் தாக்கம் புரிந்து ஒரு விளைபொருளை மாத்திரம் தருகின்றது. அது **E** ஆகும்.

(i) **A, B, C, D, E, F** ஆகியவற்றின் கட்டமைப்புகளைக் கீழே தரப்பட்டுள்ள பெட்டிகளில் வரைக.

A **B** **C**


D **E** **F**

(ii) H_2 / Pd-$BaSO_4$ / குவினொலீனுடன் **A, B, C, D** ஆகிய சேர்வைகள் வேறுவேறாகத் தாக்கம் புரியும்போது எச்சேர்வை ஈர்வெளிமயச்சமபகுதிச்சேர்வைக் காட்டாத ஒரு விளைபொருளைத் தரும்?

(iii) **A** ஆனது மிகையான HBr உடன் தாக்கம் புரியும்போது பெறப்படும் விளைபொருள் **G** இன் கட்டமைப்பைக் கீழே தரப்பட்டுள்ள பெட்டியில் வரைக.

G

(iv) **E** பின்வரும் தாக்கங்களில் தரும் **X, Y** ஆகிய விளைபொருள்களின் கட்டமைப்புகளை உரிய பெட்டிகளில் வரைக.



X **Y**

X, Y ஆகியவற்றை ஒன்றிலிருந்தொன்று வேறுபடுத்தி இனங்காண்பதற்கு ஒரு சோதனையைக் குறிப்பிடுக.

.....


(60 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.


(*b*) (i) கீழே தரப்பட்டுள்ள பெட்டிகளில் **K, L, M** ஆகிய சேர்வைகளின் கட்டமைப்புகளை வரைவதன் மூலமும் **P, Q, R** ஆகிய சோதனைப் பொருள்களை/ஊக்கிகளைத் தருவதன் மூலமும் பின்வரும் மூன்று தாக்கத் தொடரிகளையும் பூரணப்படுத்துக.

தொடரி 1:




P K

தொடரி 2:



L Q M

தொடரி 3:



R

(30 புள்ளிகள்)

(ii) தாக்கங்கள் **I – VI** இலிருந்து தெரிந்தெடுத்துக் கீழே தரப்பட்டுள்ள தாக்கங்களின் வகைகள் ஒவ்வொன்றுக்கும் **ஓர் (01)** உதாரணம் வீதம் தருக.

கருநாட்டக் கூட்டல் .....

கருநாட்டப் பிரதியீடு ..... **(10 புள்ளிகள்)**

100

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය / புதிய பாடத்திட்டம் / New Syllabus

NEW ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

රසායන විද්‍යාව II இரசாயனவியல் II Chemistry II	02 T II

* අකිල වායු මාරිලි $R = 8.314\ J\ K^{-1}\ mol^{-1}$
* අවකාදරෝ මාරිලි $N_A = 6.022 \times 10^{23}\ mol^{-1}$

பகுதி B — கட்டுரை

இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. (ஒவ்வொரு வினாவுக்கும் **150** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.)

5. (*a*) ஒரு சேர்வை $XY_2Z_2(g)$ ஆனது 300 K இலும் கூடிய வெப்பநிலைகளுக்கு வெப்பமாக்கப்படும்போது பின்வருமாறு கூட்டப்பிரிகையடைகின்றது.

$$XY_2Z_2(g) \rightleftharpoons^{\Delta} XY_2(g) + Z_2(g)$$

$XY_2Z_2(g)$ இன் 7.5 g ஆன மாதிரி ஒன்று ஒரு வெற்றிடமாக்கப்பட்ட $1.00\ dm^3$ விறைத்த மூடிய கொள்கலத்தில் வைக்கப்பட்டு வெப்பநிலை 480 K இற்கு உயர்த்தப்பட்டது.
$XY_2Z_2(g)$ இன் மூலர்த் திணிவு $150\ g\ mol^{-1}$ ஆகும். 480 K இல் RT இன் அண்ணளவுப் பெறுமானமாக $4000\ J\ mol^{-1}$ ஐப் பயன்படுத்துக. எல்லா வாயுக்களுக்கும் இலட்சிய வாயுவின் நடத்தையைக் கருதுக.

(i) கூட்டப்பிரிகைக்கு முன்னர் கொள்கலத்தில் உள்ள $XY_2Z_2(g)$ மூல்களின் எண்ணிக்கையைக் கணிக்க.

(ii) மேற்குறித்த தொகுதி 480 K இல் சமநிலையை அடையும்போது கொள்கலத்தில் உள்ள மூல்களின் மொத்த எண்ணிக்கை 7.5×10^{-2} mol எனக் காணப்பட்டது. 480 K இல் சமநிலைக் கலவையில் உள்ள $XY_2Z_2(g), XY_2(g), Z_2(g)$ ஆகியவற்றின் மூல்களின் எண்ணிக்கையைக் கணிக்க.

(iii) 480 K இல் மேற்குறித்த தாக்கத்திற்கான சமநிலை மாறிலி K_c ஐக் கணிக்க.

(iv) 480 K இல் சமநிலைக்கு K_p ஐக் கணிக்க. **(75 புள்ளிகள்)**

(*b*) மேலே (*a*) இல் விவரிக்கப்பட்ட தாக்கம் $XY_2Z_2(g) \rightarrow XY_2(g) + Z_2(g)$ இற்கு 480 K இல் $XY_2Z_2(g), XY_2(g), Z_2(g)$ ஆகியவற்றின் கிப்ஸ் சுயாதீனச் சக்திகள் (G) முறையே $-60\ kJ\ mol^{-1}, -76\ kJ\ mol^{-1}, -30\ kJ\ mol^{-1}$ ஆகும்.

(i) 480 K இல் தாக்கத்தின் ΔG ஐ ($kJ\ mol^{-1}$ இல்) கணிக்க.

(ii) மேற்குறித்த தாக்கத்தில் 480 K இல் ΔS இன் பருமன் $150\ J\ K^{-1}\ mol^{-1}$ ஆகும். ΔS இன் சரியான குறியைப் (– அல்லது +) பயன்படுத்தி 480 K இல் தாக்கத்தின் ΔH ஐக் கணிக்க.

(iii) மேலே (ii) இற் பெற்ற ΔH இன் குறியை (– அல்லது +) பயன்படுத்தி இத்தாக்கம் புறவெப்பத் தாக்கமா, அகவெப்பத் தாக்கமா என விளக்குக.

(iv) 480 K இல் $XY_2(g), Z_2(g)$ ஆகியவற்றிலிருந்து $XY_2Z_2(g)$ உண்டாகும்போது வெப்பவுள்ளுறை வித்தியாசத்தை உய்த்தறிக.

(v) $XY_2Z_2(g)$ இல் X–Z பிணைப்பின் பிணைப்பு வெப்பவுள்ளுறை $+250\ kJ\ mol^{-1}$ எனின், Z–Z பிணைப்பின் பிணைப்பு வெப்பவுள்ளுறையைக் கணிக்க. ($XY_2Z_2(g)$ இன் கட்டமைப்பு $Z—\overset{\overset{Y}{\|}}{\underset{\underset{Y}{\|}}{X}}—Z$ எனக் கொள்வோம்.)

(vi) வாயுநிலையில் உள்ள XY_2Z_2 இற்குப் பதிலாகத் திரவம் XY_2Z_2 பயன்படுத்தப்படுமெனின், தாக்கம் $XY_2Z_2\ (l) \rightarrow XY_2(g) + Z_2(g)$ இற்குக் கிடைக்கும் ΔH இன் பெறுமானம் மேலே (ii) இற் பெற்ற ΔH இன் பெறுமானத்திற்குச் சமமானதா, பெரியதா, சிறியதா எனக் காரணங்கள் தந்து விளக்குக. **(75 புள்ளிகள்)**

[பக். 10 ஐப் பார்க்க

6. (*a*) ஒரு தரப்பட்டுள்ள வெப்பநிலை T இல் ஒரு மூடிய கொள்கலத்தில் நடைபெறும் கீழே தரப்பட்டுள்ள தாக்கத்தைக் கருதுக.

$$2N_2O_5(g) \rightarrow 4NO_2(g) + O_2(g)$$

(i) தாக்கத்தில் காட்டப்பட்டுள்ள சேர்வைகள் ஒவ்வொன்றுக்கும் உரிய தாக்க வீதத்திற்கு **மூன்று** கோவைகளை எழுதுக.

(ii) இத்தாக்கம் வெப்பநிலை T இல் $N_2O_5(g)$ இன் தொடக்கச் செறிவு $0.10\ mol\ dm^{-3}$ உடன் நடைபெற்றது. 400 s நேரத்திற்குப் பின்னர் தொடக்க அளவில் 40% ஆனது பிரிகையடைந்திருப்பதாகக் காணப்பட்டது

I. இந்நேர ஆயிடையில் $N_2O_5(g)$இன் சராசரிப் பிரிகை வீதத்தைக் (average rate of decomposition) கணிக்க.

II. $NO_2(g)$, $O_2(g)$ ஆகியவற்றின் சராசரி ஆக்கல் வீதங்களைக் (average rates of formation) கணிக்க.

(iii) வேறொரு பரிசோதனையில், இத்தாக்கத்திற்கு 300 K இல் தொடக்க வீதங்கள் அளக்கப்பட்டு, பேறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

$[N_2O_5(g)]$ / $mol\ dm^{-3}$	0.01	0.02	0.03
தொடக்க வீதம் / $mol\ dm^{-3}\ s^{-1}$	6.930×10^{-5}	1.386×10^{-4}	2.079×10^{-4}

300 K இல் தாக்கத்திற்கான வீத விதியைப் பெறுக.

(iv) வேறொரு பரிசோதனை 300 K இல் $N_2O_5(g)$ இன் தொடக்கச் செறிவு $0.64\ mol\ dm^{-3}$ உடன் நடைபெற்றது. 500 s நேரத்திற்குப் பின்னர் எஞ்சியிருந்த $N_2O_5(g)$ இன் செறிவு $2.0 \times 10^{-2}\ mol\ dm^{-3}$ எனக் காணப்பட்டது.

I. 300 K இல் தாக்கத்தின் அரை வாழ்வுக் காலம் ($t_{1/2}$) ஐக் கணிக்க.

II. 300 K இல் தாக்கத்தின் வீத மாறிலியைக் கணிக்க.

(v) இத்தாக்கம் பின்வரும் தொடக்கப் படிகளைக் கொண்ட ஒரு பொறிமுறையினூடாக நடைபெறுகின்றது.

படி 1 : $N_2O_5(g) \rightleftharpoons NO_3(g) + NO_2(g)$: விரைவாக

படி 2 : $NO_3(g) + NO_2(g) \rightarrow 2NO_2(g) + O(g)$: மெதுவாக

படி 3 : $N_2O_5(g) + O(g) \rightarrow 2NO_2(g) + O_2(g)$: விரைவாக

மேற்குறித்த பொறிமுறை தாக்கத்தின் வீத விதிக்கு இசைவானதெனக் காட்டுக.

(80 புள்ளிகள்)

(*b*) வெப்பநிலை T இல் **A, B** என்னும் இரு திரவங்களை ஒரு வெற்றிடமாக்கப்பட்ட மூடிய கொள்கலத்தில் கலப்பதன் மூலம் ஓர் இலட்சியத் துவிதத் திரவக் கலவை தயாரிக்கப்பட்டது. வெப்பநிலை T இல் சமநிலையைத் தாபித்த பின்னர் ஆவி அவத்தையில் **A, B** ஆகியவற்றின் பகுதியமுக்கங்கள் முறையே P_A , P_B ஆகும். வெப்பநிலை T இல் **A, B** ஆகியவற்றின் நிரம்பிய ஆவியமுக்கங்கள் முறையே P_A° , P_B° ஆகும். கரைசலில் **A, B** ஆகியவற்றின் மூல் பின்னங்கள் முறையே X_A, X_B ஆகும்.

(i) $P_A = P_A^\circ X_A$ எனக் காட்டுக.

(சமநிலையில் ஆவியாகல் வீதமும் ஒடுங்கல் வீதமும் சமமெனக் கருதுக.)

(ii) 300 K இல் மேற்குறித்த தொகுதியின் மொத்த அமுக்கம் 5.0×10^4 Pa ஆகும். 300 K இல் தூய **A, B** ஆகியவற்றின் நிரம்பிய ஆவியமுக்கங்கள் முறையே 7.0×10^4 Pa, 3.0×10^4 Pa ஆகும்.

I. சமநிலைக் கலவையில் திரவ அவத்தையில் இருக்கும் **A** இன் மூல் பின்னத்தைக் கணிக்க.

II. சமநிலைக் கலவையில் **A** இன் ஆவியமுக்கத்தைக் கணிக்க. **(70 புள்ளிகள்)**

[பக். 11 ஐப் பார்க்க

7. (*a*) (i) மின்பகுப்புக் கலத்தினதும் கல்வானிக் கலத்தினதும் இயல்புகளை ஒப்பிடுவதற்குத் தரப்பட்டுள்ள பதங்களைப் பயன்படுத்திப் பின்வரும் அட்டவணையை பிரதி செய்து பூரணப்படுத்துக.

பதங்கள்: அனோட்டு, கதோட்டு, நேர், மறை, சுயமான, சுயமற்ற


		மின்பகுப்புக் கலம்	கல்வானிக் கலம்
A.	ஒட்சியேற்ற அரைத் தாக்கம் நடைபெறுவது		
B.	தாழ்த்தல் அரைத் தாக்கம் நடைபெறுவது		
C.	E°_{cell} இன் குறி		
D.	இலத்திரன் பாய்ச்சல்	..... இருந்து ..... வரைக்கும்	..... இருந்து ..... வரைக்கும்
E.	கலத் தாக்கத்தின் சுயவியல்பு (spontaneity)		

(ii) கீழே காட்டப்பட்டுள்ளவாறு 300 K இல் ஒரு Zn(s) அனோட்டு, ஒரு கார நீர் மின்பகுபொருள், வளியில் உள்ள ஒட்சிசன் $O_2(g)$ ஐச் சேகரிப்பதற்கு உதவும் நுண்டுளையுள்ள ஒரு Pt கதோட்டு ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு மின்னிரசாயனக் கலம் அமைக்கப்பட்டது. கலம் தொழிற்படும்போது ZnO(s) உண்டாகின்றது.

$E^{\circ}_{ZnO(s)\,|\,Zn(s)\,|\,OH^-(aq)} = -1.31\ V$ எனவும் $E^{\circ}_{O_2(g)\,|\,OH^-(aq)} = +0.34\ V$ எனவும்

$Zn = 65\ g\ mol^{-1}$, $O = 16\ g\ mol^{-1}$,

$1\ F = 96{,}500\ C$ எனவும் தரப்பட்டுள்ளது.



I. அனோட்டிலும் கதோட்டிலும் நடைபெறும் அரைத் தாக்கங்களை எழுதுக.

II. ஒட்டுமொத்தமான கலத் தாக்கத்தை எழுதுக.

III. 300 K இல் கலத்தின் அழுத்தம் E°_{cell} ஐக் கணிக்க.

IV. மின்வாய்களுக்கிடையே $OH^-(aq)$ அயன்கள் செல்லும் பாதையின் திசையைக் குறிப்பிடுக.


V. 300 Kஇல் கலம் 800 s நேரத்திற்குத் தொழிற்படும்போது $O_2(g)$ இன் 2 mol செலவிடப்படுகின்றது.

A. கலத்தினூடாகச் செல்லும் இலத்திரன்களின் மூல்களின் எண்ணிக்கையைக் கணிக்க.

B. உண்டாகும் ZnO(s) இன் திணிவைக் கணிக்க.

C. கலத்தினூடாகச் செல்லும் ஓட்டத்தைக் கணிக்க. **(75 புள்ளிகள்)**

(*b*) உப்பு $M(NO_3)_n$ ஐக் காய்ச்சி வடித்த நீரிற் கரைக்கும்போது ஒரு நிறமுள்ள சிக்கலயன் **P** உண்டாகின்றது. **M** ஆனது 3*d* தொகுப்புக்குரிய ஒரு தாண்டல் மூலகமாகும். **P** பின்வரும் தாக்கங்களுக்கு உட்படுகின்றது.



T, **U** ஆகியன ஒவ்வொன்றும் நான்கு மூலகங்களைக் கொண்ட இணைப்புச் சேர்வைகளாகும். **P**, **R**, **S** ஆகியன சிக்கலயன்களாகும்.

(i) உலோகம் **M** ஐ இனங்காண்க. சிக்கலயன் **P** இல் **M** இன் ஒட்சியேற்ற நிலையைத் தருக.

(ii) $M(NO_3)_n$ இல் n இன் பெறுமானத்தைத் தருக.

(iii) சிக்கலயன் **P** இல் **M** இன் பூரண இலத்திரன் நிலையமைப்பை எழுதுக.

(iv) **P**, **Q**, **R**, **S**, **T**, **U** ஆகியவற்றின் இரசாயனச் சூத்திரங்களை எழுதுக.

(v) **P**, **R**, **S**, **T**, **U** ஆகியவற்றின் IUPAC பெயர்களைத் தருக.

(vi) **P** இன் நிறம் யாது?

(vii) கீழே தரப்பட்டுள்ள I, II ஆகியவற்றில் நீர் எதிர்பார்க்கும் அவதானிப்புகள் யாவை?

I. அறை வெப்பநிலையில் **P** ஐக் கொண்ட ஓர் அமிலக் கரைசலுக்கு H_2S வாயுவை அனுப்பும்போது

II. மேலே I இல் கிடைக்கும் கலவையைக் கரைந்துள்ள H_2S ஐ நீக்கிய பின்னர் ஐதான HNO_3 உடன் வெப்பமாக்கும்போது.

(viii) ஒரு நீர்க் கரைசலில் இருக்கும் M^{n+} இன் செறிவைத் துணிவதற்கான ஒரு முறையைப் பின்வரும் இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்திச் சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளின் துணையுடன் சுருக்கமாக விவரிக்க:

KI, $Na_2S_2O_3$, மாப்பொருள் **(75 புள்ளிகள்)**


[பக். 12 ஐப் பார்க்க

பகுதி C — கட்டுரை

இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. (ஒவ்வொரு வினாவுக்கும் **150 புள்ளிகள்** வீதம் வழங்கப்படும்.)

8. (*a*) (i) ஒரே சேதனத் தொடக்கும் சேர்வையாக $CH_3CH_2CH_2OH$ ஐ மாத்திரம் பயன்படுத்திச் சேர்வை **G** இன் தொகுப்புக்கான ஒரு தாக்க ஒழுங்குமுறை கீழே தரப்பட்டுள்ளது.

A, B, C, D, E, F ஆகிய சேர்வைகளின் கட்டமைப்புகளை வரைவதன் மூலமும் படிகள் **1 – 7** இற்குப் பொருத்தமான சோதனைப் பொருள்களைப் பட்டியலில் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து மாத்திரம் தெரிந்தெடுத்து எழுதுவதன் மூலமும் இத்தாக்க ஒழுங்குமுறையைப் பூரணப்படுத்துக.





சோதனைப் பொருள்களின் பட்டியல்
HBr, PBr_3, பிரிடீனியம்குளோரோக்குரோமேற்று (PCC), Mg / உலர் ஈதர், KCN, செறிந்த H_2SO_4, ஐதான H_2SO_4

(52 புள்ளிகள்)


(ii) பின்வரும் தாக்கத் தொடர்களைக் கருதுக.

G, H, K ஆகிய சேர்வைகளின் கட்டமைப்புகளை வரைக. **X, Y, Z** ஆகிய சோதனைப் பொருள்களைத் தருக.




K ஆனது $NaNO_2$ / ஐதான HCl உடன் தாக்கம் புரியும்போது பென்சில் (benzyl) அற்ககோல் () ஐத் தரும் என்பதைக் கவனிக்க. **(24 புள்ளிகள்)**

(*b*) (i) பின்வரும் மாற்றல் எங்ஙனம் **மூன்றுக்கு மேற்படாத** படிகளில் நிறைவேற்றப்படலாமெனக் காட்டுக.



(20 புள்ளிகள்)

(ii) பின்வரும் தாக்கத்தைக் கருதுக.



இத்தாக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் **P, Q** ஆகிய இரசாயனப் பொருள்களை இனங்காண்க.

இத்தாக்கத்தின் பொறிமுறையை எழுதுக. **(20 புள்ளிகள்)**

(*c*) (i) இலத்திரன்நாட்டப் பிரதியீட்டுத் தாக்கங்களில் பென்சீனிலும் பார்க்கப் பீனோல் ஏன் தாக்குதிறன் மிக்கது என்பதை அவற்றின் பரிவுக் கலப்பினங்களைக் கருத்திற் கொண்டு விளக்குக.

(ii) ஓர் உகந்த தாக்கத்தைக் கொண்டு பீனோலுக்கும் பென்சீனுக்குமிடையே மேலே (i) இற் காட்டப்பட்டுள்ளவாறு உள்ள தாக்குதிறன் வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.


(iii) நீர் மேலே (ii) இல் விவரித்த தாக்கத்தின் விளைபொருளின் / விளைபொருள்களின் கட்டமைப்பை / கட்டமைப்புகளை வரைக. **(34 புள்ளிகள்)**

[பக். 13 ஐப் பார்க்க

9. (*a*) (i) பின்வரும் பாய்ச்சற் கோட்டுப்படத்தில் **A– Q** இல் தரப்பட்டுள்ள பதார்த்தங்களின் இரசாயனச் சூத்திரங்களை எழுதுக.

(**குறிப்பு** : பதார்த்தங்கள் **A– Q** ஐ இனங்காண்பதற்கு இரசாயனச் சமன்பாடுகளும் காரணங்களும் எதிர்பார்க்கப்படவில்லை.)

திண்மங்கள், வீழ்படிவுகள், கரைசல்கள், வாயுக்கள் ஆகியவற்றைக் குறிப்பதற்குப் பெட்டியில் (முறிந்த கோடுகள்) உள்ள குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.



(ii) **A** இன் பூரண இலத்திரன் நிலையமைப்பை எழுதுக.

(iii) **D** இலிருந்து **F** இற்கான மாற்றலில் **E** இன் தொழிற்பாட்டைக் குறிப்பிடுக.
இத்தொழிற்பாட்டிற்குரிய சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளைத் தருக. **(75 புள்ளிகள்)**

(*b*) திண்மம் **X** இல் Cu_2S, CuS ஆகியன மாத்திரம் அடங்கியுள்ளன. **X** இல் அடங்கியுள்ள Cu_2S இன் சதவீதத்தைத் துணிவதற்குப் பின்வரும் நடைமுறை பயன்படுத்தப்பட்டது.

நடைமுறை

திண்மம் **X** இன் ஒரு 1.00 g பகுதியானது ஐதான H_2SO_4 ஊடகத்தில் 0.16 mol dm^{-3} $KMnO_4$ இன் 100.0 cm^3 உடன் பரிகரிக்கப்பட்டது. இத்தாக்கம் Mn^{2+}, Cu^{2+} SO_4^{2-} ஆகியவற்றை விளைபொருள்களாகத் தந்தது. பின்னர் இக்கரைசலில் உள்ள மிகையான $KMnO_4$ ஆனது 0.15 mol dm^{-3} Fe^{2+} கரைசலுடன் நியமிப்புச் செய்யப்பட்டது. நியமிப்புக்குத் தேவைப்பட்ட கனவளவு 35.00 cm^3 ஆகும்.

(i) மேற்குறித்த நடைமுறையில் நடைபெறும் தாக்கங்களுக்குச் சமன்படுத்திய அயன் சமன்பாடுகளை எழுதுக.

(ii) மேலே (i) இற்குரிய விடைகளை அடிப்படையாய்க் கொண்டு பின்வருவனவற்றுக்கிடையே உள்ள மூலர் விகிதத்தைத் துணிக..

I. Cu_2S உம் $KMnO_4$ உம்
II. CuS உம் $KMnO_4$ உம்
III. Fe^{2+} உம் $KMnO_4$ உம்

(iii) **X** இல் Cu_2S இன் சதவீதத்தை நிறைக்கேற்பக் கணிக்க (Cu = 63.5, S = 32). **(75 புள்ளிகள்)**

[பக். 14 ஐப் பார்க்க

10. (*a*) பின்வரும் வினாக்கள் தைத்தேனியம் ஈரொட்சைட்டின் (TiO_2) இயல்புகளையும் அதன் உற்பத்தி "குளோரைட்டுச் செயன்முறை"யின் மூலம் நடைபெறுதலையும் அடிப்படையாய்க் கொண்டவை.

(i) இச்செயன்முறையில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களைக் குறிப்பிடுக.

(ii) தேவையான சந்தர்ப்பங்களில் சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளைத் தந்து TiO_2 இன் உற்பத்திச் செயன்முறையைச் சுருக்கமாக விவரிக்க.

(iii) TiO_2 இன் **மூன்று** இயல்புகளைக் குறிப்பிட்டு, அவ்வியல்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பயன்பாடு வீதம் தருக.

(iv) இலங்கையில் ஒரு TiO_2 உற்பத்தித் தொழிற்சாலையை நீர் தாபிப்பதற்கு எதிர்பார்த்தால், பூர்த்தி செய்யப்பட வேண்டிய **மூன்று** தேவைகளைக் குறிப்பிடுக.

(v) மேலே (ii) இல் விவரித்த உற்பத்திச் செயன்முறை பூகோள வெப்பமாதலுக்குப் பங்களிப்புச் செய்யுமா? உமது விடையை நியாயப்படுத்துக. **(50 புள்ளிகள்)**

(*b*) பச்சை வீட்டு விளைவின் மாற்றம் காரணமாகத் தற்போது பூகோள வெப்பமாதல் கைத்தொழிற் புரட்சிக்கு முன்னர் இருந்த நிலைமையிலும் பார்க்கக் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது

(i) பச்சை வீட்டு விளைவு என்பதனால் கருதப்படுவதனைச் சுருக்கமாக விளக்குக.

(ii) பூகோள வெப்பமாதல் காரணமாக ஏற்படும் பிரதான சுற்றாடற் பிரச்சினையை இனங்காண்க.

(iii) பூகோள வெப்பமாதலுக்குப் பங்களிப்புச் செய்யும் **இரு பிரதான** இயற்கை வாயுக்களைக் குறிப்பிடுக.

(iv) மேலே (iii) இல் நீர் குறிப்பிட்ட வாயுக்கள் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுவதற்கு நுண்ணங்கிகள் பங்களிப்புச் செய்யும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக.

(v) மேலே (iii) இல் நீர் குறிப்பிட்ட வாயுக்களுக்கு மேலதிகமாகப் பூகோள வெப்பமாதலிற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் **இரு** தொகுப்பு ஆவிப்பறப்புள்ள சேர்வைகளின் **இரு** கூட்டங்களைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் **ஒரு** சேர்வை வீதம் தெரிந்தெடுத்து அவற்றின் கட்டமைப்புகளை வரைக.

(vi) மேலே (v) இல் நீர் குறிப்பிட்ட இரு சேர்வைக் கூட்டங்களிலிருந்தும் மேல் வளிமண்டலத்தில் ஓசோனின் ஊக்கல் தரங்குறைதலுக்குப் (catalytic degradation) பங்களிப்புச் செய்யும் ஒரு சேர்வைக் கூட்டத்தை தெரிந்தெடுக்க.

(vii) கோவிட்-19 எனப்படும் உலகளாவிய தொற்றுநோய் காரணமாகக் கைத்தொழிற் செயற்பாடுகள் மிக மெதுவாக நடைபெறுவதனால் பூகோளச் சுற்றாடற் பிரச்சினைகள் தற்காலிகமாகப் பெரும்பாலான நாடுகளில் குறைந்துள்ளன. நீர் கற்ற **இரு** பிரதான பூகோளச் சுற்றாடற் பிரச்சினைகளைப் பயன்படுத்தி இக்கூற்றை நியாயப்படுத்துக.

(50 புள்ளிகள்)

(*c*) பின்வரும் வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள பல்பகுதியங்களை அடிப்படையாகக் கொண்டவை. பல்வைனில் குளோரைட்டு (PVC), பொலியெதிலீன் (PE), பொலிஸ்ரைரீன் (PS), பேக்லைற்று, நைலோன் 6.6, பொலியெதிலீன் தெரெப்தலேற்று (PET), கட்டா பேர்ச்சா (Gutta percha)

(i) மேற்குறித்த பல்பகுதியங்களில் **நான்கின்** மீள்வரும் அலகுகளை (repeating units) வரைக.

(ii) மேற்குறித்த ஏழு (7) பல்பகுதியங்களையும்

I. இயற்கை அல்லது தொகுப்புப் பல்பகுதியங்களாக

II. கூட்டல் அல்லது ஒடுங்கற் பல்பகுதியங்களாக

வகைப்படுத்துக.

(iii) பேக்லைற்றை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்படும் **இரு** ஒருபகுதியங்களைக் குறிப்பிடுக.

(iv) பல்பகுதியங்களை அவற்றின் வெப்ப இயல்புகளுக்கேற்ப **இரு** வகைகளாக வகைப்படுத்தலாம். இவ்விரு வகைகளையும் குறிப்பிடுக. PVC, பேக்லைற் ஆகியன இவற்றில் எவ்வகைகளுக்குரியனவென எழுதுக.

(v) மேற்குறித்த பட்டியலில் தரப்பட்டுள்ள பல்பகுதியங்களில் **மூன்றிற்கு ஒவ்வொரு** பயன்பாடு வீதம் குறிப்பிடுக. **(50 புள்ளிகள்)**

* * *

ஆவர்த்தன அட்டவணை

	1																2
1	H																He
	3	4											5	6	7	8	9	10
2	Li	Be											B	C	N	O	F	Ne
	11	12											13	14	15	16	17	18
3	Na	Mg											Al	Si	P	S	Cl	Ar
	19	20	21	22	23	24	25	26	27	28	29	30	31	32	33	34	35	36
4	K	Ca	Sc	Ti	V	Cr	Mn	Fe	Co	Ni	Cu	Zn	Ga	Ge	As	Se	Br	Kr
	37	38	39	40	41	42	43	44	45	46	47	48	49	50	51	52	53	54
5	Rb	Sr	Y	Zr	Nb	Mo	Tc	Ru	Rh	Pd	Ag	Cd	In	Sn	Sb	Te	I	Xe
	55	56	La-	72	73	74	75	76	77	78	79	80	81	82	83	84	85	86
6	Cs	Ba	Lu	Hf	Ta	W	Re	Os	Ir	Pt	Au	Hg	Tl	Pb	Bi	Po	At	Rn
	87	88	Ac-	104	105	106	107	108	109	110	111	112	113	114	115	116	117	118
7	Fr	Ra	Lr	Rf	Db	Sg	Bh	Hs	Mt	Ds	Rg	Cn	Nh	Fl	Mc	Lv	Ts	Og

57	58	59	60	61	62	63	64	65	66	67	68	69	70	71
La	Ce	Pr	Nd	Pm	Sm	Eu	Gd	Tb	Dy	Ho	Er	Tm	Yb	Lu
89	90	91	92	93	94	95	96	97	98	99	100	101	102	103
Ac	Th	Pa	U	Np	Pu	Am	Cm	Bk	Cf	Es	Fm	Md	No	Lr